# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.92/2024

### அ.சா. 7 (LW 7 )

| **பெயர்** | **திரு. டேவிட் ஜார்ஜ்** | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/ பெயர்** | அந்தோணிசாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **16.03.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி பிடி வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மாரம்பாடியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். வழக்கில் இறந்து போன ஆரோக்கியசாமியை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கில் இறந்து போன ஆரோக்கியசாமி எவ்வாறு இறந்தார் என தெரியாது. அவரது இறுதி நிகழ்ச்சிக்கு மட்டும் போனேன். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. புகாரிலுள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அ.சா.1. என்னை வேடசந்தூர் காவல்நிலையத்திற்கு புகார் அளிப்பதற்காக அன்றைய தினம் அழைத்து சென்றார். அ.சா.1 கையெழுத்து செய்த பிறகு நான் சாட்சி கையொப்பம் போட்டேன். அந்த கையொப்பம் மட்டும **அ.த.சா.ஆ.2.**ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநீயம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கில் இறந்து போன ஆரோக்கியசாமிக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது வந்ததை கேள்விப்பட்டேனா என்றால் இல்லை. இறந்து போன ஆரோக்கியசாமி பூர்வீக நிலம் விற்பனை சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு வந்ததாகவும், மேற்படி விற்பனை செய்யப்படவுள்ள நிலத்திற்கான பங்குத் தொகையை ஆஜர் எதிரிகள் கேட்டு வந்ததாகவும், அதை இறந்து போன ஆரோக்கியசாமி மறுத்து வந்ததாகவும் அதனால் கோபம் கொண்ட ஆஜர் எதிரிகள் இறந்து போன ஆரோக்கியசாமியிடம் முன்பகை கொண்டு இருந்ததாகவும் அந்த முன் பகை காரணமாக ஆஜர் எதிரிகள் அவ்வப்போது இறந்து போன ஆரோக்கியசாமியிடம் பிரச்சனை செய்வதை வழக்கமாக கொண்டிருந்தாகவும் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் தெரியாது. சம்பவ நாளான 18.07.2022 அன்று காலை

09.00மணிக்கு 1வது எதிரியான பிரவின் லாரன்ஸ் இறந்து போன ஆரோக்கியசாமியிடம் பங்கு பணம் கேட்டு தகராறு செய்து 1ம் எதிரியானவர் இறந்து போன ஆரோக்கியசாமியின் வீட்டிலிருந்து கறிக்கட்டையை எடுத்து ஆரோக்கியசாமியின் பின்தலையில் அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், அதனை தடுக்க சென்ற அ.சா.1ஐயும் மிரட்டி சென்றதாகவும் சம்பவத்தை கேள்விப்பட்டு அ.சா.1உடன் புகார் அளிக்க சென்றேன் என போலிசார் விசாரணையில் நான் சொல்லிவிட்டு தற்போது சம்பவம்குறித்து எதுவும் தெரியாது என்றும் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நானும் அ.சா.1.ம் காவல்நிலையம் செல்வதற்கு முன்பே போலிசார் எழுதி வைத்த புகாரில் நானும் அ.சா.1ம் கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது.

**<u>மறு விசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.16 21:06:04 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.